1984 மார்ச் 15]

2. தகவல் கோரல்.

(அ) பொது நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் அவையில் வைக்கப் பெறுவது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சாதாரணமாக டேபிளில் நமக்கு வைக்கப்படுகின்ற ரிக்கார்ட்ஸ் சம்பந்தமாக நம் அனைவருக்கும் தெரியும். பொதுவாக உங்கள் அலுவலகத்திற்கு வந்தவுடனேயே நீங்கள் இங்கே வைக்கின்றீர்கள். ஆனால் இலாக்காக்களிலேயிருந்து ரொம்பவும் டிலேயாக வருகிறது. முன்பே நான் இதுகுறித்து ரெய்ஸ் செய்தபோது எச்சரிக்கை செய்தீர்கள். அதைக் காலகாலத்தில் கொடுக்க வேண்டும், டிலேயானால் அதற்கான காரணத்தையும் எழுதி அத்துடன் சர்க்குலேட் செய்ய வேண்டுமென்று. You gave one direction அதற்கு நேர்மாறாக நம் முன்னால் The 9th Annual Report of Cholan Roadways Corporation Ltd., Kumbakonam and the audited Report, 1980., 1984-ல் வைக்கிறார்கள். புராசஸ் பண்ணுவதிலே delay இருக்கிறதா என்றால் இல்லை. 1979-80 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் அதாவது 31—3—1980 முடிய உள்ள கணக்குகள் ஆடிட்டரால் தணிக்கை செய்யப்பட்டு 13—9—1980 லேயே ரிப்போர்ட் அளிக்கப்பட்டுவிட்டது.

அதாவது அக்கவுண்டெண்ட் ஜெனரல் 18—9—1980-லே செய்துள்ள பணியை 26—9—1980-லே ஆனுவல் ஜெனரல் பாடி மீட்டிங் அடாப்ட் பண்ணி அப்ரூவ் ஆக்கி இருக்கின்றது. ஆக, இப்படி ஆடிட் ஆகி ஜெனரல் பாடியில் ஏற்கப்பெற்ற ஆடிட் ரிப்போர்ட்டை இவ்வாறு $3\frac{1}{2}$ வருஷத்திற்குப் பிறகு பேரவையில் வைப்பது என்பது பேரவைத் தலைவருடைய டைரக்ஷனை அவர்கள் மீறி இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம் ஆகின்றது. இப்படி காலந்தாழ்த்தி வைக்கின்றபோது. The House is deprived of its utility. 1980-லே கொடுக்கப்பெற்ற ஆடிட் ரிப்போர்ட்டை 1984-லே வைத்தால் அதன் பயன் எங்களுக்கு இல்லாமல் போகின்றது. இவ்வாறு அந்த டிப்பார்ட்மெண்ட் நடந்துகொண்டுள்ள முறை Most contemptuous and we are seriously objecting to it. அதுவும் பேரவைத்தலைவர் இதுபற்றித் தெளிவாக டைரக்ஷன் கொடுத்துள்ளதற்குப் பிறகும், இந்த வயலேஷன் வந்திருக்கின்றது. எனவே இப்போது You must pass some strictures. அவையின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தற்போது ஊரிலே இல்லை. எனவே அவர்கள் வந்ததற்குப் பிறகு கேட்டு அதற்கான பதிலை பெற்றுத்தருகிறேன்.